MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-114)

| | | | | |
|---|---|---|---|---|
| 14-02-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சார்வரி வருடம் (மாசி 2) | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |



| | | | | |
|---|---|---|---|---|
| புத்தகம் 58 | இதழ் 7<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ.அருளானந்தம்<br>துணை ஆசிரியர் : அருள்பணி இர.ஜெயந்த் ராயன் |


## திருத்தந்தையின் மறைக்கல்வியுரை: திருவழிபாட்டு இறைவேண்டல்



அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, இறைவேண்டல் குறித்த நம் தொடர் மறைக்கல்வித் தொடரில் இன்று, திருஅவையில் பொதுமக்கள் இணைந்த இறைவேண்டலான, திருவழிபாடு குறித்து சிந்திப்போம். கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு, அவர்களின் தனிப்பட்ட இறைவேண்டலுடன் திருவழிபாட்டு பங்கேற்புகளும் எவ்வளவு முக்கியத்துவம் நிறைந்தவை என்பதை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் வ-யுறுத்திக் கூறியுள்ளது. அனைத்துக் கிறிஸ்தவ ஆன்மிகமும், புனித மறையுண்மைகளின் கொண்டாடத்தில் தன் ஆதாரத்தைக் கொண்டுள்ளது. இந்த புனித மறையுண்மைகளின் கொண்டாட்டத்தில் நாம் காணும் அப்பமும் இரசமும், எண்ணெயும் தண்ணீரும் என்ற அருளடையாளங்கள் வழியாக, இயேசு தூய ஆவியாரின் வல்லமையில் தன் மக்கள் நடுவே பிரசன்னமாகி இருக்கிறார். மனுவுரு எடுத்த வேளையில் எவ்வாறு இறைமகன் மனிதத் தசையோடு நம்மிடையே குடிகொண்டாரோ, அவ்வாறே வார்த்தை மற்றும் அருளடையாள திருவழிபாட்டு கொண்டாட்டங்களின் வழியாக நம்மோடு உள்ளார். நம் தனிப்பட்ட இறைவேண்டல் என்பது, திருஅவையின் திருவழிபாடு இறைவேண்ட-ருந்து தன் ஆன்மீக செல்வத்தைப் பெற்று தன்னை வளப்படுத்த வேண்டும். ஏனெனில் திருவழிபாட்டுக் கொண்டாட்டம் என்பது, கிறிஸ்தவ இறைவேண்ட-ன் ஆதாரம், மற்றும் உச்சம் ஆகும். இந்த உன்னத வழிபாட்டு நடவடிக்கையில் நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வை கிறிஸ்துவுடன் இணைத்து இறைத்தந்தைக்கு புனித மற்றும் அவருக்கேற்றப் ப-யாக வழங்கும்படி, அழைக்கப்படுகிறோம்.

இவ்வாறு, இறைவேண்டல் குறித்த தன் புதன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த பெருந்தொற்று காலத்தில் நாம் அனைவரும் திருவழிபாடுகளின் மெருகைக் கண்டுகொள்வதுடன், நம் தனிப்பட்ட இறைவேண்டல்களை மேலும் வளப்படுத்துவோம் என்ற அழைப்பை விடுத்தார். பின் அனைவருக்கும் தன் அப்போஸ்த-க்க ஆசீரையும் அளித்தார்.

## துயருறும் மக்கள் குறித்து இயேசுவின் தனி அக்கறை

இயேசுவால் குணப்படுத்தப்பட நம்மை அனுமதிப்போம்; அதன் வழியாக, இயேசுவின் கனிவான குணப்படுத்துதலுக்கு நாமும் சான்றுகளாச் செயல்படுவோம் என்ற விண்ணப்பத்தை முன்வைத்து தன் மூவேளை செப உரையைத் தொடங்கினார் திருத்தந்தை. தன் பணிக்காலத்தில் ஆற்றிய புதுமைகளை காணும் வெறும் பார்வையாளர்களாக மட்டும் தன் சீடர்கள் இருப்பதை விரும்பாத இயேசு, அவர்களுக்கும் குணப்படுத்துதல் மற்றும் பேயோட்டுதல் ஆகிய அதிகாரங்களை வழங்கி, வேறு ஊர்களுக்கு அனுப்பி வைத்ததையும் சுட்டிக்காட்டினார்.

அனைத்து நோயுற்றோர் மீதும் அக்கறை கொண்டு செயலாற்றுவது இறைவனின் கனிவை துயருறும் மனித குலத்திற்கு கொணரும் ஒருங்கிணைந்த பணியாகும் என்று எடுத்துரைத்த திருத்தந்தை ஞாயிறு முதல் வாசகமான யோபு நூ-ன் பகுதியை சுட்டிக்காட்டி, மனிதர்கள் அடையும் துன்பங்களைக் குறித்து யோபு எழுப்பும் கேள்விக்கு இயேசு அருகி-ருந்து கனிவுடனும் கருணையுடனும் பதில் தருகிறார் என்று கூறுகிறார். இறைவனோடு கூடிய நெருங்கிய உறவில் இயேசுவின் கருணை தன் ஆழமான அடித்தளத்தைக் கொண்டுள்ளது எனக் கூறிய திருத்தந்தை இயேசு விடியற்காலைக் கருக்க-ல் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்று, அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார் (மாற்கு 1:35) என்ற ஞாயிற்றுக்கிழமையின் நற்செய்தி வாசகப் பகுதியை சுட்டிக்காட்டினார்.

twitter

### திருத்தந்தையின் ட்விட்டர் செய்திகள்

- ☆ வாழ்வின் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து தாக்குதல்களி-ருந்தும் நாம் குணம்பெற உதவ வேண்டியது சமுதாயத்தின் கடமை.
- ☆ மக்களுக்கு நெருக்கமாக இருப்பது, கடவுளின் வாழ்வுமுறை உரையாடல் மற்றும் திறந்தமனது வழியாக நற்செய்திக்கு நாம் என்றும் சான்று பகர்தல் வேண்டும்.
- ☆ ஒவ்வொரு பிரச்சனையும், புதியதொரு பக்குவநிலைக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இன்னல்களை எதிர்கொள்ளும்போது அவற்றி-ருந்து கிடைக்கும் நல்வாய்ப்புக்களைக் கண்டுணர வேண்டும்.

ஆசிரியர் பேனா...

# இயேசுவைத் தொடுவோம்! இயேசுவாகத் தொடுவோம்!

**நம் ஆசை:** நோய் நொடி இல்லாத நலமான வாழ்க்கை வேண்டும் என்பது ஒவ்வொருவருடைய ஆசை. நோயுறும்போது உடல் படும் நோக்காட்டைவிட மனம் படும் பாடு பெரிது. சில நேரங்களில் உடல் நோய் மனத்தை வேதனைப் படுத்துகின்றது; சில நேரங்களில் மனவேதனை உடலை நோயுறச் செய்கின்றது. உடலையும் மனத்தையும் ஒரு சேர பராமரிப்பதே நலமான வாழ்வுக்கு வழி.

**இன்னொருவர் தேவை:** உடல் நோய் தீர மருந்துபோதும். மனநோய் நீங்க கரிசனையோடு ஆறுதல் சொல்- உடன் இருக்கும் நல்மனம் கொண்ட இன்னொருவர் தேவை. இவரே நோயுற்றவருக்கு கடவுளாகத் தோன்றுவார். மனித குலத்தின் நோய் நீங்க 'இம்மானுவேலாக' கடவுளே மனிதரானார். இவரே மீட்பராகிய இயேசு என்று உலகம் அறிந்து கொண்டது. இவர் ''நம் பிணிகளைத் தாங்கி கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்; ... அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் (எசாயா 53:4-5).

**மீட்பு:** ''காலம் நிறைவேறிவிட்டது இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்கு 1:15) என்று முழங்கி இயேசு தன் மீட்புப் பணியை ஆரம்பிக்கின்றார். மீட்பு என்பது பாவத்தை கைவிட்டு நன்மை செய்யும் ஆற்றல் பெறுவது (எசா.1:16).

**பாவம்:** உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது பாவம். சொல்வது ஒன்றாகவும் செய்வது மாறானதாகவும் இருக்கும் பரிசேய போ-த்தனம் பாவம். ஒருவரிடம் இருப்பதை வஞ்சித்து தனதாக்கிக் கொண்டு, வஞ்சிக்கப்பட்டவரை ஏழ்மையிலே வாட விடுவது பாவம். மிகுதியாக தன்னிடம் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவருக்கு உதவ விரும்பாத கடின மனம் கொண்டிருப்பது பாவம். கடமையைச் செய்ய (அ) தவறான வழியில் சலுகை செய்ய கையூட்டுப் பெறுவது பாவம். பிறர்மீது பொய்க் குற்றம் சுமத்துவது பாவம் (லூக்.37:14).

இத்தகைய பாவங்களால் பணம் சேர்ந்தாலும் மனம் அமைதி கொள்வதில்லை. மாறாக, அச்சமே மிகுதியாகிக் கொண்டிருக்கும். தவறான வழியில் சேர்த்த செல்வத்திற்காக தண்டிக்கப்படுவோமோ என்ற அச்சம் மனதை புழுவாய் அரித்துக்கொண்டிருக்கும். தன்மானத்தை மற்றவருக்குப் பிணையாக வைக்க வேண்டிய நிலை வரும். இன்று தமிழக அரசியல்வாதிகள் பலரும், அதிகாரிகள் சிலரும் இத்தகைய நிலைக்கு ஆளாகி இருக்கின்றனர்.

**மீட்புப் பணி:** ''உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' (மாற்கு 2:5) என்ற இயேசுவின் வார்த்தைகள் மனநோயையும், உடல் நோயையும் நீக்கும் மருந்தாக இருக்கின்றன. பாவம் மன்னிக்கப்பட்ட முடக்குவாதமுற்றவன் உட-லும், மனத்திலும் நலம் பெற்று மீட்படைந்தவனாகச் செல்கிறான் (மாற்கு 2:1-13). இயேசுவே நலம் தரும் மருந்து என்று மக்கள் புரிந்து கொண்டனர். ''அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களுக்கு எல்லாம் நோயாளர்களை படுக்கையில் கொண்டுவரத் தொடங்கினர்.... (நோயாளர்கள்) அவரது மேலுடையின் ஓரத்தையாவது தொட அனுமதிக்குமாறு வேண்டினார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தனர்'' (மாற்கு 6:55-56). காது கேளாதோர், பார்வையற்றோர், நோயுற்றோரை இயேசு தொட்டார்; அவர்களும் குணம் பெற்றனர் என்பதற்கு நற்செய்தி நூல்கள் சான்று பகர்கின்றன.

**அன்னையின் அருள்:** நோய் நீக்கி மீட்பளிக்கும் இயேசுவின் பணி இன்றும் தொடர்கின்றது. அன்னையின் திருத்தலங்களிலே நிகழும் அற்புதச் சுகங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. மருத்துவரால் கைவிடப்பட்ட நோயாளர் பலர் இத்திருத்தலங்களில் அற்புதமாக நலம் பெற்றதை நாம் கேட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். மருந்தும் மருத்துவரும் கடவுளின் கருவிகளே; குணப்படுத்துபவர் 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று சொல்லும் மீட்பராம் இயேசு.

**நோயாளர் தினம்:** பிப்ரவரி மாதம் 11ம் தேதியை உலக நோயாளர்கள் தினமாகச் சிறப்பிக்கின்றோம். அனைத்து நோயாளர்களுக்காகவும் பரிந்துரை செபங்களை எழுப்ப அழைக்கப்படுகின்றோம். லூர்து நகரில் 1858, பிப்ரவரி 11 அன்று காட்சி தந்த அன்னை மரியாவைப் பின்பற்றி நோயுற்றோருக்காகப் பரிந்துரை செபங்களை அவர் வழியாக ஆண்டவரிடம் சமர்ப்பிப்போம். 'வியாதிகாரர்க்கு ஆரோக்கியமான' அன்னை மரியா வழியாக இன்றும் பலர் உடல் நலமும், ஆன்ம நலமும் பெற்று மீட்படைந்தோராக மகிழ்வதைக் கேட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். பெரும் நோய்த் தொற்று அச்சுறுத்தும் இக்காலத்தில் லூர்து அன்னையின் பரிந்துரையை நாடுவோம். நோயுற்ற நம் சகோதர சகோதரிகளுக்காக உருக்கமுடன் செபிப்போம்.

**மனமாற்றம்:** இம்மாதம் 17ம் தேதி புனித தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். 'நம் பிணிகளை தம்மேல் சுமந்து கொண்டவரும், நம் குற்றங்களுக்காக காயப்பட்டவருமான' இயேசுவின் பாடுகளைத் தியானிப்போம். நம் பாவங்களுக்காக வருந்துவதோடு அவற்றை கைவிட்டு நல்லவை செய்ய முற்படுவோம். இதுவே நமது மீட்பு. மனம் மாறியதற்கான அடையாளமாக செபமும் தபமும் செய்வதோடு ஏழ்மையில் வாடுவோருக்குப் பரிவுடன் உதவி செய்வோம். ''உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள்; தீமை செய்தலை விட்டொழியுங்கள்; நன்மை செய்ய கற்றுக் கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம்பெண்ணுக்காக வாதாடுங்கள்....'' (எசாயா 1:16-17).

**தொடுவோம்:** செப தபங்களாலும், பிறர் அன்புச் செயல்களாலும் இயேசுவைத் தொடுவோம். அன்பாலும் அக்கறையாலும் இயேசுவாக நோயாளரைத் தொடுவோம். அப்போது நாமும், சமுதாயமும் நலம் பெற்றவர்களாக மகிழ்ந்து வாழ்வோம்.



## தவக்கால அடையாளங்களும், நற்செய்தியும்



அருள்திரு. S. ஜான்சன்
உதவி பங்குத்தந்தை, ரெட்டியார்பாளையம்.

தொ.நூ.9:8-15 1பேதுரு 3:18-22 மாற்கு 1:12-15 **21-02-2021**

ஆண்டுதோறும் நாம் கடைப்பிடிக்கும் தவக்கால அடையாளச் செயல்களால், கிறிஸ்துவின் மறையுண்மைகளைப் புரிந்து கொள்ளவும், அதில் தொடர்ந்து முன்னேறவும், இறுதியில் அவற்றின் பயன்களை நம் நன்னடத்தையால் அடையவும் இன்றைய தவக்கால முதல் ஞாயிறு திருவழிபாட்டு வாசகங்கள் வ-யுறுத்துகின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் இன்றைய தவக்கால முதல் ஞாயிறு திருப்ப-யின் திருக்குழும மன்றாட்டு ஆகும். திருவழிபாட்டின் கருத்துருவும், வாசகங்களின் தொகுப்பும், செய்தியும் ஒன்றாக ஒத்துபோகின்றன. அவை நமக்கு மாபெரும் செய்தியையும் வெளிப்படுத்துகின்றன.

**வில்-அம்பு:** இன்றைய முதல் வாசகத்தில், நோவாவுடன் நம் தந்தை கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையை வாசிக்கின்றோம். உடன்படிக்கைகள், கடவுள் மனிதரோடு உறவாடும் ஓர் உன்னத அடையாளம். இதனடிப்படையில், கடவுள் நோவாவிடம் "என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன், எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும்" என்று கூறுகிறார். இவ்வடையாளத்தின் அர்த்தம் என்ன? முதலாவதாக, வில் என்ற பண்டைய கால போர்க்கருவியை தனித்து நாம் சிந்திக்க முடியாது. ஆண்-பெண், நல்லது-கெட்டது, இன்பம்-துன்பம், பிறப்பு-இறப்பு, என்பதைப் போன்றே வில்-அம்பு என்ற இரண்டுமே இணைந்தே செல்லும் ஓர் கருவி. கடவுள் தீயவர்களை தண்டிக்க, வில்-அம்பை தனது போர்க் கருவியாக பயன்படுத்துகிறவர் என்றே தொடக்கநூ-ல் அறிய முடிகிறது. "உம் (கடவுளே) அம்புகளை எய்தி, அவர்களை கலங்கடியும்" (திபா.14:46). "கடவுள் அவர்கள் மேல் அம்புகளை எய்ய, அவர்கள் உடனே காயமுற்று வீழ்வார்கள்" (திபா.64:7). தீயவர்களை முற்றிலும் வெள்ளப் பெருக்கின் வழியாய் அழித்து நோவாவையும், அவரது குடும்பத்தையும், விலங்கினங்களையும் காப்பாற்றுகின்றார்.

இச்செயல், கடவுள் தன்னிடம் இருந்த வில்-அம்பை பயன்படுத்தி தண்டித்த செயல் என்பதை உணர்த்துகின்றது. ஏனெனில் இனி "மனிதகுலத்தை அழிப்பதற்கு தண்ணீர் ஒருபோதும் பெருவெள்ளமாக மாறாது" (தொ.நூ.9:15) என்று முடிவெடுத்து, வில்லையும் அம்பையும் ஒன்றாக, தீமையை அழிப்பதற்கு பயன்படுத்திய கடவுள், தான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் நினைவாக அம்பை தன் கையில் வைத்துக்கொண்டு, வில்லை மேகத்தின் மேல் அதாவது அம்பை வில்-டமிருந்து பிரித்து வைக்கிறார். அம்பும்-வில்லும் ஒன்றாக இருந்தால்தான் அது போர்க்கருவி-பிறரை அழிப்பதற்கு பயன்படும். வில்லை தனியாக, மனிதர்கள் பார்க்கும் வண்ணம், மேகத்தின் மேல் வைக்கும்போது, ஒருபோதும் அம்பை அழிக்கும் கருவியாகப் பயன்படுத்தமுடியாது என்ற அடையாளத்தை வழங்கி, நான் மனித இனத்தை அழிக்க மாட்டேன் என்று தனக்கு உணர்த்தும் அடையாளமாகவும், அந்த வில்லை மட்டும் தனியாகப் பார்க்கும் மானுடம், இனிநாம் தவறிழைக்கக் கூடாது என்பதை உணர்த்தும் அடையாளமாகவும் அவ்வுடன்படிக்கை திகழும் என்பதுதான் இத்தவக்காலத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம்.

**தண்ணீர்:** இன்றைய இரண்டாம் வாசகத்தில், இயேசுவோடு மூன்று ஆண்டு காலம் பயணித்து, ஆழ்ந்த இறை அனுபவங்களைப் பெற்றவராய், இயேசுவின் சகத்தோழராய் இருந்த, புனித பேதுரு தண்ணீரை அடையாளமாகப் பயன்படுத்தி தன் மக்களுக்கு திருமுழுக்கைப் பற்றி அறிவுறுத்துகிறார். ஏனெனில், நாம் நினைப்பது போல் திருமுழுக்கு என்றால் பெயர் வைத்தல் என்பதைப்போல, பேதுருவின் வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த மக்களும், திருமுழுக்கின் உட்பொருளை அறியாமல் இருந்தார்கள். ஆகவே தண்ணீர் என்ற அடையாளத்தின் வழியாய் அவர்களுக்குத் திருமுழுக்கு என்ற அருளடையாளத்தின் மகிமையை போதிக்கிறார். அதை உணர்த்துவதற்கு பேதுரு, தனது மட-ல் எடுத்துக் கொண்ட எடுத்துக்காட்டு நோவா. புதிய ஏற்பாட்டில் நோவாவை எடுத்துக்காட்டாக கையாளும் விவி-ய ஆசிரியர்கள் அனைவரும்,நோவாவையும், அவர் செய்த பேழையையும் மையப்படுத்தி, பேழையின் வழியாக அவர் காப்பாற்றப்பட்டார் என்று கூறும்போது, பேதுரு மட்டும் சற்று வித்தியாசமான அணுகுமுறையைக் கையாளுகின்றார். நோவாவும், அவரின் குடும்பமும் காப்பாற்றப்பட்டு, பேழையினால் அல்ல, மாறாக தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர் (1பேதுரு3:20) என்று எழுதுகிறார். காரணம், திருமுழுக்கு என்ற அருளடையாளத்தில் பயன்படுத்தக்கூடிய தண்ணீர் என்ற அடையாளத்தை, பழைய ஏற்பாட்டு நோவாவுடன் பொருத்திப் பார்க்கிறார். "அந்தத் தண்ணீரானது திருமுழுக்கின் முன்னடையாளம்" (1பேதுரு3:21). தண்ணீரானது எவ்வாறு பழைய வாழ்வி-ருந்து புதிய வாழ்விற்கு வர உதவியதோ, அது போல வாழ்வளிக்கும் ஊற்றாகிய கிறிஸ்துவின் துன்பத்தில், உயிர்ப்பில் பங்கு பெறும் நாமும் புதிய வாழ்விற்குள் நுழைகிறோம் என்ற செய்தியை தண்ணீர் என்ற அடையாளத்தின் வழியாய் கற்பிக்கிறார் புனித பேதுரு.

இத்தவக்காலத்தில் ஒப்புரவு அருளடையாளத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தாலும், நாம் பெற்ற திருமுழுக்கை நினைவுபடுத்திப் பார்ப்பது சிறந்தது. ஏன் திருமுழுக்குப் பெற்றோம்? அதன் விளைவுகள் எனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியதா? ஏற்படுத்துமா? என பலகேள்விகளுக்கு விடை காண முயல்வது சிறந்தது.

**நற்செய்தி:** காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு 1.15) என்ற, இன்றைய நற்செய்தியின் இறுதிப் பகுதியை வாசிக்கும்போது ஒரு சந்தேகம் எழுகிறது. இது இயேசுவின் போதனையா? அல்லது திருமுழுக்கு யோவானின் போதனையா? ஏனெனில், ஒரு புறம் மத்.3.1-2 ல் மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என திருமுழுக்கு யோவான் பறைசாற்றுகின்றார். மறுபுறம் மாற்கு 1.15ல் மேற்குறிப்பிடப்பட்டவாறு, இயேசுவும் அதே சொற்களைப் பயன்படுத்துகிறார். யாருடைய செய்திதான் இது? எவ்வித ஐயமும் இல்லாமல் இந்த நற்செய்தி, மனித இயேசுவை காலத்தால் முந்திய, திருமுழுக்கு யோவானின் செய்தியே. இயேசு யோவானிடம் திருமுழுக்கு பெற்றவர், யோவானின் இரு சீடர்களை தன்னோடு இணைத்துக் கொண்டவர் என்ற அடிப்படையில் யோவான் அறிவித்த நற்செய்தியையே இயேசுவும் அறிவிக்கின்றார். ஆனால் அதே சமயத்தில் கடல் அளவு வித்தியாசமும் உண்டு. திருமுழுக்கு யோவான் கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும்போது சற்று பயத்தையே மக்களின் மனத்தில் பதித்தார் எனக் கூறலாம். காரணம், மத்.3:10லும், லூக்3:9லும், திருமுழுக்கு யோவான் "மரங்களின் வேரருகே கோடாரி வைத்தாயிற்று, நற்கனி தராத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்" என்ற கடுமையான வார்த்தைகளால், தனக்குரிய பாணியில் கற்பித்தார். ஆனால், இயேசு "நோயற்றவருக்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை" என்றும் "ப-யை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்றும், "நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே தேடி வந்தேன்" என்றும், தன்னை "காணாமற்போன ஓர் ஆட்டை தேடியே செல்பவராக" மக்களுக்கு தனக்கே உரிய பாணியில் கடவுளின் நற்செய்தியை அறிவித்தார். சென்ற இடமெங்கும், மன்னிப்பு, இரக்கம், அன்பு, புரிந்து கொள்ளுதல் கைப்பற்றி நடத்தல், அரவணைப்பு, பாதுகாப்பு, கரம் தொடுதல், உற்சாகமளித்தல் என இவற்றை அடிப்படையாக வைத்தே மனமாற்றத்தை மக்களிடையே எதிர்பார்த்தார்.

பிரியமானவர்களே, இவ்வருட தவக்காலம் நம்மை இருபெரும் செயல்களை நம்மில் தூண்ட அழைக்கின்றது. ஒன்று தவக்காலங்களில் பல்வேறு அடையாளங்களைப் பயன்படுத்துகிறோம். நாற்பது நாட்கள் நோன்பிருத்தல், காவி உடைஅணிதல், காலணி அணியாதிருத்தல், உண்டியல் சேகரித்தல், திருயாத்திரை மேற்கொள்ளுதல் போன்ற தவக்கால அடையாளங்கள், முதல் மற்றும் இரண்டாம் வாசகங்களின் அடையாளங்களைப் போன்று கடவுளோடு உரையாட, உறவாட நம்மைத் தூண்டுகிறதா? அல்லது தடையாக இருக்கிறதா? இரண்டாவது, ஒவ்வொருவருமே கடவுளின் நற்செய்தியை நமக்குரிய பாணியில் பிறருக்கு அறிவிக்கின்றோம். எனது தனித்துவமான பாணி என்ன? பிறருக்கு ஆறுதலையும், நிம்மதியையும், மன்னிப்பையும், இரக்கத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றதா? அல்லது உண்மையென வெற்று தோற்றமளிக்கும் பகை, வெறுப்பு, வக்கிரம், பொறாமை பழிவாங்குதல், ஏமாற்றுதல் என்பவைகள் என்னை இயக்குகின்றதா? ஆழச் சிந்திப்போம்.



# புனித வளனார் வளர்க

– சுவாமி ஆ. லூயிஸ்.

இறைவனின் எல்லையில்லாத் திட்டத்தில் புனித சூசையப்பர் ஒரு புதையல். ஏனெனில் அவர் அனைவருக்கும் அளவில்லாத பாடங்களை மௌனத்தின் வழி வழங்கி வருகிறார். முதன் முதலில் காணமுடியாத மூவொரு கடவுளின் மாபெரும் அடையாளமாக இருக்கின்றார். திருக்குடும்பத்தின் பாதுகாவலராக இருக்கின்றார். மௌனம், சப்தம், அசைவு இசைவு, பயணம், கனவு வழியாக நமக்குப் பல பாடங்களை வழங்குகின்றார். 1870ம் ஆண்டு திருச்சபையின் பாதுகாவலராக அங்கீகரிக்கப்படுகின்றார். நூற்றி ஐம்பது ஆண்டுகளாகத் திருச்சபையை பல்வேறு நிலைகளில் பாதுகாத்து வருகின்றார். எனவே இவரைப் போற்றி என்றும் வேண்டுவோம்.

**கனிவு-கரிசனை:**

புனித வளனார் பேசுவதைவிட மிகவும் மௌனத்தில் தனது கரிசனையையும் கனிவையும் வெளிப்படுத்துவதை இன்று திருச்சபை மேற்கொள்வது மேலானது. அதிகாரம், ஆட்சி என்ற அணுகுமுறைகளைவிட கனிவோடு உறுதியோடு இருப்பதும், இயங்குவதும் நன்று. புனித சூசையப்பர் திருக்குடும்பத்தை எளிமையில் பராமரித்ததை நாம் மறந்துவிடக்கூடாது.

**பண்பும்-பணிவும்:**

முப்பது ஆண்டுகள் மரியன்னையையும் இயேசுவையும் கண்காணித்தது மிகவும் மேலானது. எகிப்திற்குப் போவது, அங்கிருந்து திரும்புவது, மறைவாழ்வில் நாசரேத்தில் இருந்ததும் நம்மை வியப்புக்கு அழைத்துச் செல்லும். மூவொரு கடவுளின் அருள் அடையாளம் என்தை மிகவும் பொறுப்புணர்வோடு காத்து வந்தது நமக்கு நல்லப்பாடமாகும்.

**அன்பும் அரவணைப்பும்:**

எளிமையான திருக்குடும்பத்தின் அகநிலை அன்பிலும் அரவணைப்பிலும் வளம் பெற்றது, இறை ஆசீர் பெற்றது எனவே திருக்குடும்பம் எடுத்துக்காட்டாய் அன்றும் இன்றும் விளங்குகின்றது. கடின உழைப்பினால் சாதாரண மனிதர்களைப் போல் வாழ்க்கைச் சான்று அளிப்பதும் வளனாரின் வளமாகும்.

**துணிவும்-துணையும்:**

திருக்குடும்பத்தின் வாழ்க்கை முழுவதும் துணிவுடனும் கடவுள் துணையுடனும் பயணம் செய்தது. இன்றும் நமது குடும்பங்கள் வாழ, பொறுப்புகளை மேற்கொள்ள புனித சூசையப்பர் எடுத்துக்காட்டாய் இருந்து வருகிறார். திருச்சபை முழுவதையும் பாதுகாத்து வருகிறார்.

**உழைக்கும் -உள்ளம்:**

எளிமையின் அடித்தளம் அன்றாட உழைப்பாகும், மரியன்னை உணவை ஏற்பாடு செய்வதில் முன்நிற்கின்றார். கடின உழைப்பில் வளனார் ஈடுபட்டு வந்தார். இன்றை நவீன உலகில் இயந்திரத்தைவிட இந்தியாவில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதால் உழைப்பே உயர்வு தரும் என்று வாழ முற்படுவோம்.

**வளனார் பக்தி:**

மெய்மையான பக்திக்கு இயேசு, மரியன்னை, சூசையப்பர் என மூவரும் நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இன்று நமது குடும்பங்கள், குழுக்கள் சந்திக்கும் சவால்கள் அனைத்திற்கும் ஆதாரமாக அடித்தளமாக, தூண்டுதலாக திருக்குடும்பம் விளங்குகின்றது. நம்பிக்கை கடுகளவு இருந்தால் நாமும் நலமுடன் தனியாக குழுவாக வாழமுடியும் என்று வாழ்வோம். நம்பிக்கை இருக்கும் இடத்தில், இல்லத்தில், இதயத்தில் அஞ்சுவதற்கு இடமில்லை. உயிர்த்த ஆண்டவர் உடன் இருக்க நாம் கவலைப்பட வேண்டாம்.

**குடும்ப செபம்:**

இணைந்து செபிக்கும் குடும்பம் ஒற்றுமையாய் வாழும் என்பது திருக்குடும்பத்தின் நிரந்தரப் பாடம். செபத்தில் உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் நாம் நிரப்பப்பட்டு வழி நடத்தப்படுகிறோம். இதனை அனுபவித்து அன்றாடப் பயிற்சியாக மேற்கொள்வதால்தான் இன்றையத் திச்சபையில் நாம் ஒற்றுமையை வளர்த்து பாதுகாத்து வருகின்றோம். சோதனைகள் மேல் சோதனைகள் வந்தாலும் அஞ்சாது உயிர்த்த ஆண்டவரோடு பயணிப்போம். புனித அல்போன்சா அம்மாவைப்போல் துன்பங்களைத் திறந்த மனதோடு ஏற்றுக்கொண்டு பயணிப்போம், பிராத்திப்போம். புனித சூசையப்பர் நமது குடும்பங்களின், தலத்திருச்சபையின், திருச்சபையின், மனித இனத்தின் பாதுகாவலர் என்பதை மறந்துவிடாது தினமும் மன்றாடுவோம். இந்த யூபிலி ஆண்டில் அவரின் அருட்துணையால் நாம் சமாதானத்துடன் வாழ்வோம், வழி நடத்துவோம், வாழ வைப்போம். புனித சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.

---

## புதுவை மிஷன் அச்சகம்
## தோள் கொடுப்பீர்! தாங்கிடுவீர்!!

**மிஷன் அச்சக புனரமைப்புக்காக**
**நன்கொடை வழங்கியவர்கள்**

**1) அற்புதமரி லப்போர்த் - புதுவை. ரூ.2000**

தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவிய நல் உள்ளங்களுக்கு நன்றி. மற்றவர்களும் உதவிட அன்பு கலந்த இறையாசீரோடு கேட்டுக் கொள்கிறோம்.

- மேலாளர்.

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :**

சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

**2020-2021** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும்.

- ஆசிரியர்.

6

# விவி–யத்தில் மீட்பின் வரலாறும் நிகழ்வுகளும்

ரியோ – புதுவை-11.

எபிரேயரான ஆபிரகாமின் குடும்பம், இஸ்ரயேல் இனமாக உருவெடுத்து எகிப்தில் வாழ்ந்த வரலாற்றை சென்ற இதழில் பார்த்த நாம், பாலை நிலத்தில் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்து மீட்பு வரலாற்றில் பங்கேற்பதை ஆராய்தல் அவசியம். அவர்களின் பாலைநில வாழ்வை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

1. எகிப்து முதல், சீனாய் மலை வரை. வி.ப.12:37-19:2.
2. சீனாய் மலையடிவாரத்தில் பாளையம். 19.3-எண்10:10.
3. சீனாயி-ருந்து சித்தம் வரை. எண்10:11 - யோசுவா 2.

இந்த 40 ஆண்டு பாலை நில வாழ்வில்தான் மக்கள் இஸ்ரயேல் நாடு (nation) என்ற தகுதியடைய பக்குவமடைகிறார்கள். விப.20 -ருந்து லேவியராகமம் 27 வரையுள்ள 48 அதிகாரங்களில், இறைவனை தலைவராகக் கொண்ட இறையரசின் மக்களாக, இஸ்ரயேல் நாடாக உருவாகின்றனர். இத்தகைய இறையரசின் இனமாக மாற்றுவதற்கு மூன்று நிலைகள் முன் வைக்கப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள்.

1. கடவுளின் திருவுளம் (will of God) பத்துக் கட்டளைகளாகத் தரப்படுகின்றது. அக்கட்டளைகள் இஸ்ரயேல் நாட்டின் சட்டங்களாகின்றன.

2. கடவுளின் வழிமுறைகள் (way to God) அவர்களின் நடைமுறை வாழ்வாதாரங்களாக அமைகின்றன.

3. கடவுளோடு இணைந்து செல்வது (walk with God) மட்டுமே அவர்களின் விடுதலையாகின்றது.

**கடவுளின் திருவுளமாகத் தரப்படும் பத்துக்கட்டளைகள்**

இக்கட்டளைகளின் முதல் பகுதி விப.20:3-12 வேதத்தைச் சார்ந்ததாகவும், மறுபகுதி விப.20:13-17 ஒழுக்கத்தைச் சார்ந்ததாகவும் அமைகின்றன. முதல் பகுதியில் மனிதனின் கடவுளைச் சார்ந்த நெறிமுறை உறவுகளைக் காண்கிறோம். கடவுள் அன்பு செய்யப்பட வேண்டும். மத்.22:37-38, விண்ணகம் சார்ந்த வாழ்வு நிலைகள் வ-யுறுத்தப் படுகின்றன. இப்பகுதியில் முதல் மூன்று வசனங்கள் (3-6) கடவுளின் எண்ணங்களையும், 7ஆம் வசனம் வார்த்தையின் (பெயரின்) மகத்துவத்தையும், 8-12 வசனங்கள் வேத நெறியின் செயல்பாடுகளையும் எடுத்தியம்புகிறது. இக்கட்டளைகளின் மறுபகுதி விப.20:13-17 மனிதர்களுக்கிடையே உள்ள உறவு நெறிமுறைகளையும், நம் அயலார்கள் அனைவரும் அன்பு செய்யப்பட வேண்டும் என்பதையும், வெளியுலகைச் சார்ந்த சமுதாய அக்கறைகளில் ஈடுபடுவதையும் சுட்டிக்காட்டுகின்றன. விப.2013-15 செயல் நெறிமுறைகளையும், 16வது வசனம் வார்த்தை பற்றியும், 17வது வசனம் எண்ணங்களைப் பற்றி பேசுகின்றன.

கடவுளின் வழிமுறைகள் மக்களின் நடைமுறை வாழ்வாதாரங்களாக மாறுகின்றன. விப.25-46 இப்பகுதியில் மக்களின் நடைமுறை வாழ்வாதாரங்களின் மையமாக உடன்படிக்கைப் பேழையும், குருத்துவமும் உருவாகின்றன. எவ்வாறு கிறிஸ்துவ மக்களின் மையமாக நற்கருணைப் பேழையும், குருத்துவமும் மைய நிலையுடையதோ அவ்வாறே இஸ்ரயேல் மக்களின் அடிப்படையாக உடன்படிக்கைப் பேழையும், குருத்துவமும் அமைந்தன.

**அ. உடன்படிக்கைப் பேழை விப.25:**

உடன்படிக்கைப் பேழைக்குப் பல பெயர்கள் இடப்பட்டன. 'திரு உறைவிடம்' 25:9; இந்தப் பேழையில் கடவுளின் உடன்படிக்கை கற்பலகைகள் இருந்ததால், 'சாட்சியப் பேழை' 25:21 என்றும் உணரப்பட்டது. இப்பேழை இந்தக் கூடாரத்தினின்று இறைவன் மக்களைச் சந்தித்ததால், 'சந்திப்புக் கூடாரம்' என்றும் பெயர் விளங்கிற்று.

இப்பேழையின் ஒவ்வொரு அங்கமும் ஆழ்ந்த இறையுணர்வை எழுப்புகின்றன. இவ்வுணர்வுகளின் நிறைவை, நிறைவேற்றத்தை கிறிஸ்துவில் நாம் காண்கிறோம். யோவா.1:14. பொன்னால் வேய்ந்த பேழை, மறுபிறப்பையும்; விளக்குத்தண்டு ஒளியையும், நீர்த் தொட்டி தூய்மையையும், இரக்கத்தின் இருக்கையையும், அந்த இருக்கையில் உள்ள இரு கெருபீம்கள் புனிதப்படுத்துதலையும் எண்பிக்கின்றன.

**ஆ. குருத்துவம்**

இந்த உடன்படிக்கைப் பேழையின் மாண்பை நிலை நிறுத்த குருத்துவம், இஸ்ரயேல் மக்களிடையே நிறுவப்படுகின்றது. விப.28,29; லேவி.8-10. மோசேக்கு முந்தைய காலத்தில் குடும்பத் தலைவன் குருவாகக் கருதப்பட்டார். (family priesthood) மோசே காலத்தில் லேவி குலத்தில் பிறந்தவர்கள் மட்டுமே குருக்களாயிருந்தனர். புதிய நித்திய உடன்படிக்கைக் காலமான கிறிஸ்து யுகத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் (விசுவாசியும்) குருவே. முழுத்திருச்சபையும் ''அரச குருத்துவக் கூட்டத்தினர்'' 1பேது.2:9; திவெளி.1:16. இவ்விறை குருக்குல கூட்டத்தினருக்குப் பணிசெய்ய, பணிக்குருத்துவமும் உருப்பெற்றன.

**கடவுளுடன் இணைந்து பயணிப்பதே விடுதலை - லேவியராகமம்.**

இறைவனுடன் பயணித்து உண்மையான விடுதலையைச் சுவைப்பது எப்படி என்பதை லேவியராகமம் விளக்குகிறது. இப்பயணத்தின் களநிலவரம், பின்புலம், நிபந்தனை, விளைவுகளை லேவியராகமம் வெளிப்படுத்துகின்றது. விவி-யத்தில் இறைஞானம் மிக்கதாகவும் இந்நூல் திகழ்கிறது. பிராயச்சித்தமும் பரிகாரமும் எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பதை விடுதலைப் பயணநூல் அறிவிக்கின்றதென்றால், இறைகோட்பாட்டுக் கொள்கைகளை அறிவிப்பது லேவியராகமம். அது போன்றே புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளும் மீட்பின் உண்மை நிகழ்வுகளை பறைசாற்றுகிறதென்றால், திருமுகங்களனைத்தும் மீட்பின் கோட்பாட்டுக் கொள்கைகளைத் தருகின்றன.

| லேவியராகமம் | |
|---|---|
| அதி 1-10 | அதி 11-25 |
| 1. கடவுளை நோக்கிப் பயணிக்க வழி. | 1. கடவுடளுடன் இணைந்து பயணிக்கும் வழி. |
| 2. இது ஒரு தனிச் சலுகை, சிறப்புரிமை. | 2. பயிற்சி, பழக்கம். |
| 3. இறை வழி நீதி நேர்மையானது. | 3. இறை ஆவியின் வழி மக்களை புடமிடுகின்ற வழி. |
| 4. கடவுள் நிலையும் செயல்பாடுகளும். | 4. மக்கள் எப்படி மாற வேண்டும், என்ன செய்யவேண்டும். |
| 5. விசுவாசமும், நிலைப்பாடும். | 5. நடத்தையும் செயல்பாடும். |

பாலைநிலத்தில் 40 ஆண்டுகளாக, மக்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்துபவராகவும், தன் மீட்புத் திட்டத்தில் படிப்படியாக முன்னேற்றம் கொணருகின்வராக கடவுள் திகழ்கின்றார். மக்களின் பாவநிலைகளைக் கண்டித்து, புறம் தள்ளி, தன் அன்பை வெளிப்படுத்தி, தனக்குரிய ஓர் இனமாக உருவாக்குகின்றார். இச.77-8. இணைச்சட்டத்தின் இவ்வசனங்களே, இஸ்ரயேல் இனத்தின் முழு வரலாற்றையும் வெளிப்படுத்தும் சொற்றொடர்களாகும்.

– தொடரும்..

## இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருள்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்



### கருத்துரை - 59

### இயேசுவால் மீட்கப்பட்ட மகதலா மரியா

### (லூக்.8:2,24:10-11, மாற்கு 16:9-11, யோவான் 20:11-18)

**யார் இந்த மகதலா மரியா?**

கலிலேயா கடலின் மேற்கு கரையில் உள்ள மகதலா என்ற மீன்பிடி நகரத்தைச் சேர்ந்த ஒரு யூதப்பெண்தான் மகதலா மரியா. இவர் பெயர் நற்செய்தியில் 12 முறை இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**இயேசுவின் சீடர்**

ஏழு பேய்களால் ஆட்கொள்ளப்பட்டிருந்த மகதலா மரியாவை இயேசு அப்பேய்களினின்று விடுவித்தார். அதன்பிறகு மகதலா மரியா இயேசுவோடு பயணித்த சீடர்களுள் ஒருவரானார். இயேசு நற்செய்தியை அறிவிக்க ஊர்ஊராய், நகர்நகராய் சென்றபோது அவருடனேயே சென்று இயேசுவுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார். இயேசுவின் கல்லறைவரை பயணித்த இவர், அதன்பின்னும் அவரது நிழலாகவே வாழ்ந்து வந்தார்.

**மகதலா மரியாவின் மறைதூதுப் பணி**

**→ இருட்டறைக்குள் நுழைந்த வெளிச்சம்**

அச்சம்,
அவமானம்,
சந்தேகம்,
தனிமை,
நிராகரிப்பு,
பதட்டம்,
நம்பிக்கையற்ற தன்மை

ஆகிய இத்தனை இருட்டுப் பேய்களும் மகதலா மரியாவை சூழ்ந்திருந்ததால் அவரது வாழ்க்கை இருட்டறைக்குள்ளேயே முடங்கியிருந்தது. ஆயினும், இயேசுவைக் குறித்த ஒரு சிறு நினைவு அவருக்குள் கசிந்துகொண்டிருந்ததால், இயேசு அவரது வாழ்க்கைக்குள் நுழைந்தார்.

**“இயேசுபிரான்**
**இருட்டிற்குள்ளும்**
**நுழையக்கூடியவர் அன்றோ!”**

இயேசு நுழைந்தவுடன் அவருக்குள் இருந்த அத்தனை இருட்டுப்பேய்களும் காணாமல்போனது. மகதலா மரியாவின் இருட்டறை வாழ்க்கைப் பிரகாசித்தது. அன்றே இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டார் மகதலா மரியா.

**பேய்களால் ஆட்கொள்ளப்பட்டிருப்போரும் கூட**
**இறைவனால் ஆட்கொள்ளப்படலாம்.**
**இதற்குப் பெயர்தான் மீட்பு.**

**→ வெளிச்சத்திற்குள் நுழைந்த நற்செயல்கள்**

பூக்களின் வாசம் பூக்களுக்கு மட்டுமல்ல
**புவியோருக்கே** சொந்தமாகிறது.
ஆதவனின் ஒளிக்கதிர் ஆதவனுக்கு மட்டுமல்ல
**அகிலத்திற்கே** சொந்தமாகிறது.
இறைவனின் அன்பு இறைமகனுக்கு மட்டுமல்ல
**இறைமக்கள் அனைவருக்குமே** சொந்தமாகிறது.
நமது இறையன்பு நமக்கு மட்டுமல்ல
**நானிலத்திற்கே** சொந்தமாகிட வேண்டும்.

மகதலா மரியா இறையன்பு என்ற வெளிச்சத்திற்குள் நுழைந்தபின் நற்செயல்கள் பலவற்றின் பிறப்பிடமானார். இறைவன் விரும்பும் செயல்களை மட்டுமே அவர் செய்து கொண்டிருந்தார். தனக்குள் இருந்த இறையன்பைக் குறித்து, தானறிந்த அத்தனை பேருக்கும் சொல்லிக்கொண்டிருந்தார்.

**அன்பை அன்பு செய்ய**
**இறைமகனிடம் கற்றுக்கொண்டார் மகதலா மரியா.**
**இதற்குப் பெயர்தான் மீட்பு.**

**→ நற்செயல்களுக்குள் நுழைந்த வலிகள்**

இறைமகனுக்கு பணிவிடை செய்துகொண்டிருந்த மகதலா மரியா இறைமகன் வலியால் துடித்தபோது அவருடன் இருந்தார். சிலுவையில் இறைமகனின் இறுதிமூச்சுவரை மட்டுமல்ல, அதன்பின்னும் இயேசுவை எங்கு எடுத்துச்சென்றனர் என்பதை ஒதுங்கிநின்று உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். தாங்கமுடியா இப்பெரும் துன்பத்தைத் தாங்கிக்கொண்ட மகதலா மரியா அத்துடன் ஓய்ந்துபோகவில்லை. நேசித்த ஆண்டவரை தரிசிக்க வேண்டி ஓடினார் விடியற்காலையிலேயே கல்லறை நோக்கி.

இறைவனை முன்னிட்டு வலிகளைப் பொறுத்துக் கொள்வோருக்கு கிடைக்கும் **வலிமை வல்லமையுடையதாய் மாறும்.**

ஆகவேதான், பல கோலியாத்துக்கள் இயேசுவின் கல்லறையைச் சூழ்ந்திருப்பார்கள் என்றறிந்திருந்தும் அச்சத்திற்குள் அகப்படாது, வலிகளால் துவண்டுவிடாது, ஆண்டவரை நோக்கி ஓடினார்.

**வலியைத் தாங்கியதால் வலிமை கிடைக்கப்பெற்றார்.**
**இதற்குப் பெயர்தான் மீட்பு.**

**→ வலிகளுக்குள் நுழைந்த உயிர்ப்பு**

**நோய்களினின்று** இயேசுவால் உயிர்ப்பிக்கப்பெற்ற மகதலா மரியா, மீண்டும் பழைய வாழ்க்கையை நோக்கிச் செல்லவே இல்லை. நன்றி உணர்வோடு இயேசுவைப் பின்தொடர்ந்தார் இவர். உயிர்த்த இயேசுவின் குரலை முதலில் கேட்கும் பாக்கியம் இவருக்கே கிடைத்தது. இயேசுவின் குரலைக் கண்டுகொண்ட அற்புதப் பெண்மணி இவர். உயிர்த்த இயேசுவை முதலில் காணும் பேறுபெற்றவர் இவர். இவ்வாறாக இவரது வலிகளுக்குள் இயேசுவின் உயிர்ப்பு தெய்வீகப் பிரசன்னமாக நுழைந்ததால், உயிர்த்தெழுதலின் முதல் சாட்சியாக மாறினார் மகதலா மரியா. ஓடோடிச் சென்று அன்னை மரியாவுக்கும், திருத்தூதர்களுக்கும் இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை அறிவித்தார் மகதலா மரியா.

**உயிர்த்த இயேசுவைக் கண்ட**
**மகதலா மரியாவின் நாவினின்று அதுமுதல்**
**நற்செய்தி மட்டுமே வெளிவந்தது.**
**இதற்குப் பெயர்தான் மீட்பு.**

**“இயேசுவின் கட்டளைகள் விளக்காகவும்,**
**நமது போதனைகள் வெளிச்சமாகவும் இருக்கட்டும்.”**



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி, திருப்பாப்புலியூர், கடலூர்.

## 28. ஒற்றுமையே பலம்

மனநோய் மருத்துவமனையொன்றில் பார்வையாளர் ஒருவர் அதன் கண்காணிப்பாளர் ஒருவரோடு சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார். அப்போது ஆபத்தான மனநோயாளிகள் சிலர் ஒரே வார்டில் வைக்கப்பட்டிருப்பதை கவனித்தார். அப்படிப்பட்ட நூறு நோயாளிகளை மூன்று காவலர்கள் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். பார்வையாளருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. “ஆபத்தான இந்த நூறு நோயாளிகளும் அந்த மூன்று காவலர்களை தாக்குவார்கள் என்கிற அச்சம் உங்களுக்கு ஏற்படவில்லையா?” எனக் கேட்டார். “பயப்படவில்லை, ஏனெனில் பைத்தியக்காரர்கள் ஒருபோதும் ஒன்றுபடுவதில்லை” என்று அமைதியாக பதிலளித்தார் அந்த கண்காணிப்பாளர். அவருடைய இந்தப் பதிலில் தனி நபர்களுக்கும், தேசங்களுக்கும், குழுக்களுக்கும் ஒரு படிப்பினை இருக்கிறது. நம்முடைய பிரிந்திருக்கும் குணமே நம்மை பைத்தியக்காரர்கள் என்கிற நிலைக்குத் தள்ளி விடுகிறது.

மக்கள் எந்த அளவிற்கு எண்ணத்தில் ஒற்றுமை, உணர்ச்சியில் ஒற்றுமை, நோக்கத்தில் ஒற்றுமை கொண்டிருக்கின்றார்களோ, அந்த அளவிற்கு அவர்களுடைய கூட்டுச் சக்தியும் மிகுதியாகிறது. ஒற்றுமையின்மை பலகீனம் மட்டுமல்ல, அது ஆபத்தானதும்கூட! எவ்வளவுக்கு எவ்வளவு விலகிச் செல்கின்றோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு எதிர் அணிகளாகவும் ஆகிவிடுகிறோம். இது மிக மோசமான மோதல் நிலைக்கு வழிவகுக்கிறது. சுயநலவாதிகள் தனது நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்பதையே சிந்தித்து, ஒற்றுமைக்கு உடன்படுவதில்லை. இவர்களை பாரதிதாசன்,

*தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு*
*சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்*
*சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்*
*தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!*

என்று சாடுகிறார். காரணம், பொது நலனில் இல்லாத ஒற்றுமை, இவர்கள் அனைவருக்கும் தங்கள் சொந்த நலனில் இருக்கிறது. சுயநலவாதிகளைப் பற்றி வைரமுத்து, *“தேசத்தில் பற்றும் தீ, தன் சட்டையில் பற்றும் வரைக்கும், எவனும் சப்தம் இடுவதில்லை”* என்று சுட்டுகிறார். இத்தகையோர், பிறருக்கு நேரும் பாதிப்பில் தனக்கும் பங்கு இருக்கிறது என்று புரிந்து கொள்வதே புத்திசாலித்தனம். மேலும், தான் பலசாலி, பணம் படைத்தவன், அதிகாரம் கொண்டவன், தனக்குப் பிறரின் உதவி தேவையில்லை என்று வாழும் ஆணவக்காரர்கள் ஒற்றுமையை விரும்புவதில்லை. இவ்வாறு சுயநலம் மற்றும் ஆணவம் கொண்டோரை பிரிவினைவாதிகள் கருவியாகப் பயன்படுத்தி, பிளவினை உண்டாக்கி தாங்கள் நினைப்பதை சாதித்துக்கொள்கிறார்கள். பின்வரும் கதை இதை நன்றாக விளக்குகிறது.

குருட்ஜுவ் ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார். ஒரு மந்திரவாதி பல செம்மறி ஆடுகளை வளர்த்து வந்தான். அவன் ஒவ்வொரு நாளும் ஒரு செம்மறி ஆட்டை உணவிற்காக கொன்றான். மற்ற ஆடுகள் இதை பார்த்துக்கொண்டுதான் இருந்தன. அவை அந்த மந்திரவாதிக்கு எதிராக ஒன்றையும் செய்யவில்லை. அவை ஒருபோதும் அவனை எதிர்க்கவில்லை. அந்த மந்திரவாதியுடன் தங்கியிருந்த சில பார்வையாளர்கள், “இது என்ன ஒரு வினோதம்! ஒவ்வொரு நாளும் ஒரு செம்மறி ஆடு தேர்ந்தெடுக்கப்பட்டு, மற்ற ஆடுகள் முன்னாலேயே கொல்லப்படுகிறது. ஆனால் மற்ற ஆடுகள் தங்களது நாட்களும் விரைவில் வரக்கூடும் என்பதை இதுவரை அறியவே இல்லை. அவற்றால் தப்பிக்க முடியும்! அவற்றால் கலகம் செய்ய முடியும்! ஆனால் அவை ஏன் அதைச் செய்யவில்லை?” என்று கேட்டார்கள். அந்த மந்திரவாதி சிரித்துக்கொண்டே, “இது ஒரு தந்திரம். நான் அனைத்து ஆடுகளையும் வசீகரப்படுத்தி விட்டேன். நான் அவை ஒவ்வொன்றிடமும், ‘நீ ஒரு செம்மறி ஆடு அல்ல, மற்ற அனைத்தும் செம்மறி ஆடுகள். ஆனால் நீ மட்டும் செம்மறி ஆடு அல்ல, நீ ஒரு சிங்கம்’ என்று கூறியுள்ளேன். எனவே ஒவ்வொரு ஆடும், தான் ஒரு சிங்கம் என்றும், மற்றவை எல்லாம் ஆடுகள் என்றும் நம்பிக்கொண்டிருக்கின்றன. எனவே ஓர் ஆடு கொல்லப்படும்போது எதுவும் கவலைப்படவே இல்லை. ஏனெனில் அவை தங்களது சொந்தக் கற்பனையில் தங்களைச் சிங்கங்களாய் எண்ணிக்கொண்டிருப்பதால், மற்ற ஆடுகளோடு ஒற்றுமையாக இணைந்து செயல்பட முன்வருவதில்லை” என்றான்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையானது ஒற்றுமை. ஒருவர் பிறருடன் ஒற்றுமையாக இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம். ஏனெனில் அவருக்குப் பிறர் உதவி எப்போதும் கிடைக்கும். மற்றவர்களிடம் ஒற்றுமையாய் இல்லாதவருக்கு யாரும் உதவிட மாட்டார்கள். இதை நமது நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் பொழுது பால கங்காதர திலகர் ஆங்கிலத்தில், “United, we stand…Divided, we fall” என்ற கோஷத்தால் எடுத்துரைத்தார். இதையே பாரதியார், ‘வந்தே மாதரம்’ என்ற தம் கவிதையில்,

*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு – நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே*
*நன்றிதைத் தேர்ந்திடல் வேண்டும் இந்த*
*ஞானம் வந்தால் பின்நமக்கெது வேண்டும்*

எனப் பாரத சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு ஒற்றுமை தேவை என்பதை உணர்ந்திடும் ஞானம் வந்தால் போதும், வேறு எதுவும் வேண்டாம் என அறிவுறுத்தினார். அப்போதுதான் ஒற்றுமை ஓங்கும், வேற்றுமை அகலும். மேலும்,

*எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்*
*யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும்!*
*முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்*
*முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்*

என வாழ்விலும் சாவிலும் கூட ஒற்றுமையுடன் இருப்போம் என்கிறார். ஒற்றுமையாகச் செயல்படும்போது அதன் விளைவு எதுவானாலும், அதைக் குறித்து வருத்தமடைவதோ அல்லது பிறரைக் குறைக்கூறுவதோ இல்லாமல் முழுமனதோடு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இங்கே புலப்படுகிறது.

வசந்தம் வீசும்...



# அமைதிதரும் ஆனந்தம்

– திரு. அல்போன்ஸ் மோசஸ் -புதுச்சேரி-9.

அப்போதுதான் அவர் தனது கையைப் பார்த்தார். கையில் அது இல்லை. அந்தப் பண்ணையாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தொன்றுதொட்டு பல தலைமுறைகளைக் கண்டது, உணர்வுகள், பல நல்லதருணங்கள், வெற்றிகள் அவருக்கு கிடைப்பதற்கு காரணமாக இருந்தது, இரண்டு சவரன் தங்கமுலாம் பூசப்பட்ட அந்தக் கைக்கடிகாரம்தான். இந்த கிடங்கில் எங்கோ விழுந்துவிட்டது. “எப்படி நான் அதைத் தேடிக் கண்டுபிடிப்பேன்?” என்று புலம்பிக்கொண்டிருந்தார்.

சட்டென்று ஒரு யோசனை பளிச்சிட்டது. உடனே அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைப் பார்த்து, “டேய் தம்பிகளா இங்க ஓடியாங்கடா” என்று அழைப்பு விடுக்க, பிள்ளைகளும் அவரிடம் ஓடி வந்தனர்.

“தம்பிகளே, இந்தக் கிடங்கில் என் கைக்கடிகாரம் எங்கோ விழுந்துவிட்டது. நான் எவ்வளவோ தேடியும் கிடைக்கவில்லை. நீங்கள் தேடிப் பாருங்கள். யார் அதைக் கண்டுபிடித்துக் கொண்டு வருகின்றீர்களோ அவர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும்” என்றார்.

“அய், ஜாலி.” சிறுவர்கள் துள்ளிக் குதித்து அவருடைய வேளாண் கிடங்கிற்குள் ஓடித் தேடினார்கள். உள்ளே இருந்த வைக்கோல்போர், தானிய மூட்டைகளின் இடுக்குகள், பரண்கள், பானைகள் என்று அனைத்து இடங்களிலும் தேடியும் எங்கும் கிடைக்காமல் அலுத்துப்போய் பண்ணையாரிடம் வந்து “மன்னியுங்கள் ஐயா, எங்கு தேடியும் கிடைக்கவில்லை” என்று கூறினார்கள்.

அதில் ஒரு சிறுவன் மட்டும் அவரை அணுகி, “ஐயா எனக்கு மட்டும் இன்னொரு வாய்ப்பு கொடுங்கள். நான் அந்தக் கடிகாரம் கிடைக்கின்றதா என்று கடைசியாகப் பார்த்து வருகிறேன்” என்றான். அத்துணை சிறுவர்களின் ஏளனச் சிரிப்பொலிக்கு நடுவில், “ஆகட்டும் போய்வா” என்ற பண்ணையாரின் பதில் அந்தச் சிறுவனின் காதில் ஒலிக்க, கிடங்கை நோக்கிச் சிட்டாகப் பறந்து அதன் உள்ளே சென்று கதவை மூடினான்.

பதினைந்து நிமிடங்கள் கடந்த பிறகு மெல்ல கதவு திறந்தது. உள்ளே சென்ற சிறுவன் மகிழ்ச்சிப் புன்னகையோடு பண்ணையாரை நோக்கி ஓடிவந்தான். அவன் கையில் அந்த அழகிய கடிகாரத்தைப் பார்த்தவுடன் பண்ணையார் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆச்சரியத்துடன், “நீ மட்டும் எப்படி இந்த விலைமதிப்பற்ற கடிகாரத்தைக் கண்டுபிடித்தாய்?” என்று உணர்ச்சிப்பூர்வமாக வினவினார்.

“ஐயா நான் உள்ளே போய் எங்கும் தேடவில்லை. கிடங்கிற்கு நடுவில் சென்று சிறிது நேரம் கண்ணை மூடி அமர்ந்திருந்தேன். அந்த அமைதியில் கடிகாரத்தின் டிக்.. டிக்..டிக்..என்ற மெல்லிய ஒலி எனது காதில் விழுந்தது. ஒலி வந்த திசையில் போய் தேடினேன். கண்டேன் கடிகாரத்தை” என்றான் பெருமையோடு. போன உயிர் திரும்ப வந்ததென்று மகிழ்ந்த பண்ணையார், சொன்னபடி மிகச் சிறந்த பரிசை அந்தச் சிறுவர்கள் மத்தியில் அவனுக்கு வழங்கி மகிழ்ந்தார்.

எப்போதெல்லாம் பிரச்சனைகள் நம்மைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரிக்கின்றதோ, அப்போதெல்லாம் மனதை ஒரு நிலைப்படுத்தி, அமைதி காக்கின்றபோது அதற்கான விடை உடனே கிடைத்துவிடும், மனமும் அமைதியில் நிலைத்துவிடும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இயேசுவின் வளர்ப்புத் தந்தை யோசேப்பின் இக்கட்டான சூழ்நிலையில் வானதூதர் அவருக்குக் கனவில் தோன்றி இறை சித்தத்தைப் புரிய வைத்து உணரச்செய்து, அவரது ஐயத்தைப் போக்கியது போல நம்மைப் படைத்து, காக்கின்ற இறைவன் நம்மையும் நல்வழிப்படுத்துவார்.

**அமைதி நிச்சயம் ஆனந்தம் தரும்.**

# ஒரு நேர்முகத் தேர்வு



திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

மோகன்தாஸ் அவர் பெயர். தொழிற்கல்வியில் இளங்கலை பட்டதாரி. மேற்படிப்புக்கு செல்லமுடியாத குடும்பச் சூழல். கற்ற கல்லூரியில் நடந்த வளாக நேர்காணலில் தோல்வி. ஆகவே, வேலை தேடினார். இவருடன் படித்த அனைவருக்கும் வேலை கிடைத்துவிட்டது, இவரைத் தவிர. மனம் தளராமல் போராடினார். ஏன் இவருக்கு மட்டும் வளாக நேர்காணலில் தோல்வி என்று கேட்கிறீர்களா… அது… வேறொன்றுமில்லை…

கல்லூரியில் படிக்கும் பொழுது இவருடன் ஒரு பேராசிரியருக்கு கருத்து மாறுபாடு ஏற்பட்டு அந்தப் பேராசிரியர் இவருடைய மதிப்பெண்களைச் சேதப்படுத்திவிட்டார். மோகன்தாஸ் தெய்வபக்தியில் வளர்ந்தவராதலால் அதைப் பொருட்படுத்தாமல் படிப்பில் தீவிர கவனம் செலுத்தி தேர்வில் வெற்றியும் பெற்றுவிட்டார். விடுவாரா அந்தப் பேராசிரியர்; வளாக நேர்காணலில் தோல்வியடையும்படி செய்துவிட்டார். எதற்கும் அஞ்சாத மனத் துணிவும் எதிர்நோக்கும் மோகன்தாஸிடம் இருந்தது.

ஒரு நாள் ஒரு பன்னாட்டு நிறுவனத்திலிருந்து அவருக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்தது. நேராக ஆலயத்திற்குச் சென்று நற்கருணை நாதரை நோக்கி ஜெபித்தார், புறப்பட்டார்.

நிறுவனத்தின் வரவேற்பறையில் சான்றிதழ்களை சரிபார்த்தாயிற்று. முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று வரிசையாக வந்த எல்லா தேர்வுகளையும் வெற்றிகரமாகக் கடந்துவிட்டார். கடைசியில், நேர்முகத் தேர்வு அறைக்குள் நுழைந்தார். கோட்டும் சூட்டுமாக நான்கு பேர் கம்பீரமாக வீற்றிருந்தார்கள். ஒருவர் மட்டும் டீ சர்ட்டில் இருந்தார். அந்த மூன்று தேர்வுகளிலும் அவர் பெற்றிருந்த மதிப்பெண்களைப் பார்த்தார்கள். பிறகு அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

“இந்தக் கம்பெனியில் வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?”

“இங்கு எனக்கு வேலை கிடைத்தால் கம்பெனிக்கு நல்லது. இல்லையென்றால் எனக்கு நல்லது” என்றார்.

“அதெப்படி? வேலை கிடைக்கவில்லையென்றால் உங்களுக்கு எப்படி நல்லதாகும்?”

“வேலை கிடைத்தால் கம்பெனிக்காக உழைப்பேன். இல்லையென்றால் என் சொந்தக் காலில் நிற்க முயற்சி செய்வேன்” என்றார் அவர்.

“இப்படிப்பட்ட இளைஞர்கள் தான் நமக்கு வேண்டும்” என்று பெருமிதத்துடன் சொன்னார் டீ சர்ட்காரர்.

உடனே வேலையில் சேரச் சொல்லி கடிதமும் கொடுக்கப்பட்டது.

கடிதத்தைத் திறந்து வாசித்த மோகன்தாஸுக்கு ஆனந்த அதிர்ச்சி. மாதச் சம்பளம் ரூபாய் இரண்டரை லட்சம். காத்திருந்தது வீண்போகவில்லை. அதிர்ச்சியிலிருந்து மீண்ட மோகன்தாஸுக்கு வேதாகமத்தில் படித்தது நினைவுக்கு வந்தது.

“…துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில் துன்பத்தால் மனஉறுதியும், மனஉறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.” (உரோமையர் 5:3-5).

# அறுசுவை உணவு

அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.



உலகிலுள்ள உணவுப் பழக்க வழக்கங்களில் மிகச் சிறந்தது தென்னிந்திய உணவுகள் என்றால் அது மிகையாகாது. அதிலும் குறிப்பாக தமிழர்களின் உணவுப் பழக்கங்கள் மிகச் சிறந்தவையாகும். கொரோனா கொள்ளை நோயானது உலகின் எல்லா நாட்டு மக்களையும் கொள்ளையடித்த வேளையில் நாம் ஓரளவு நிலைத்து நிற்க முடிந்தது என்றால் அதற்கு காரணம் நமது உணவுமுறையே. ஏனென்றால் தமிழர் உணவுமுறை அறுசுவையும் சரிவிகித அளவில் கலந்த, இயற்கையோடு இணைந்த ஓர் உணவு முறையாகும்.

இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, கார்ப்பு மற்றும் உவர்ப்பு ஆகிய ஆறும் அறுசுவைகளாகும். நாம் உண்ணும் எல்லா உணவுப் பொருள்களும் இந்த அறுசுவைகளுக்குள் அடங்கிவிடும். அறுசுவைகள் எந்தெந்த உணவிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன என்பது பற்றியும், அவை நம் உடலில் என்ன நன்மைகள் தருகின்றன என்பதையும் பார்க்கலாம்.

| வ. எண் | சுவை | பயன் | உணவு வகைகள் |
|---|---|---|---|
| 1. | இனிப்பு | தசைகள் | வெல்லம், கரும்பு, வாழைப்பழம், ஆப்பிள், பீட்ரூட், கேரட். |
| 2. | புளிப்பு | கொழுப்பு, செரிமானப் பகுதிகளுக்கு நல்லது. | தயிர், புளியம்பழம், எலுமிச்சை பழம், மாங்காய், ஆரஞ்சு பழம், தக்காளி. |
| 3. | கசப்பு | நரம்புகள், தேவையற்ற நீர் உடலில் குறைய. | பாகற்காய்,சுண்டைக்காய், சுக்கங்காய், வெந்தயம். |
| 4. | துவர்ப்பு | இரத்தம் | நெல்லிக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு,தேயிலை, வாழைக்காய், அத்திக்காய். |
| 5. | கார்ப்பு (கசப்பு) | எலும்புகள், நோய் எதிர்ப்பு சக்திபெற, உடல்சூடு குறையும். | மிளகாய், பூண்டு, மிளகு, வெங்காயம், இஞ்சி. |
| 6. | உவர்ப்பு | உமிழ்நீர் சுரப்பிகள் | உப்பு |

மனித உடலில் கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், சோடியம், குளோரைடு, இரும்பு, துத்தநாகம், மக்னீசியம், அயோடின் மற்றும் புளோரைடு போன்ற ஏராளமான கனிமங்கள் உள்ளன. இவை நம் உடல் உறுப்புகள் சீராக இயங்குவதற்கு மிக மிக இன்றியமையாதவையாக உள்ளன. எனவே அனைத்து வகையான சுவைகளையும் நம் உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமாகிறது. நமது குழந்தைகள் சில வேளைகளில் ஒருசில உணவுகளை (பாகற்காய் மற்றும் பிற காய்கள்) மற்றும் இறைச்சி போன்றவற்றை விரும்புவதில்லை. மாறாக அனைத்து வகை உணவுகளையும் நாம் உண்ணும்போதுதான் நம் உடலுக்குத் தேவையான அனைத்து தாதுக்கள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் கனிமங்கள் சரிவர கிடைக்கும், நமது உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

156 இளம் உள்ளங்களுக்கு

# தாய் தந்த விளக்கம்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**செபம் - ஓர் விளக்கம்:** செபம் மனதை அமைதிப்படுத்தும் ஓர் அற்புத மருந்து. அதன் விலை நம்பிக்கையும் தாழ்ச்சியுமே! இறைவன் முன் தன்னைத் தானே தாழ்த்தி நம்பிக்கையுடன் செய்யும் செபம், வ-மையானது. அது நிச்சயமாக வெற்றியைத் தரும். அளவிட முடியாத அன்புடனும், இறை பிரசன்னத்தில் இருக்கிறோம் என்ற உறுதியுடனும், எவ்வித குழப்பமும் இல்லாமல், மனதை ஒருமுகப்படுத்திய நிலையில் வெறும் வார்த்தைகள் இல்லாத மௌன மொழியில் கடவுளுடன் உரையாடுவதுதான் செபம்.

**ஜெனரல் கிராண்ட்:** அமெரிக்காவில் உள்நாட்டு போரின்போது அமெரிக்கப் படைகளின் தலைமைத் தளபதியாக இருந்து அமெரிக்காவை வெற்றி பெறச் செய்தவர்தான் உ–ஸீஸ் கிராண்ட் (Ulysses S.Grant). பிறகு 1869ல் அமெரிக்காவின் 18வது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றவர்; தொடர்ந்து இரு முறை அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**அதிபர் மாளிகையில் செப வழிபாடு:** ஒரு ஞாயிறு காலை அதிபர் ஜெனரல் கிராண்ட் தன் குடும்பத்தினரோடும், தன் அமைச்சரவையில் உள்ள சில அதிகாரிகளோடும், வெள்ளை மாளிகையில் உள்ள வழிபாட்டிற்கான தன் அறையில் குழுமியிருந்தார். ஜெனரல் கிராண்ட் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர். ஞாயிறு காலை வழிபாட்டைத் தவறுவதில்லை.

**குறுக்கீடும் குளறுபடியும்:** அன்றைய செபவழிபாடு மிக நேர்த்தியான சூழ–ல் ஆரம்பித்தது. அங்கிருந்த அனைவருமே கிராண்ட் வழிபாட்டில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தியவராகக் காணப்பட்டார். அப்போது அங்கே நிலவிய அமைதியை கலைக்கும் வண்ணம் சிரிப்பொ– கேட்டது. இதுபோன்று அதிபரின் பிரார்த்தனைக் கூட்டத்தில் கேட்டதே இல்லை. இந்தச் சிரிப்பொ–க்கு சொந்தகாரர் அதிபரின் மூன்று வயது குழந்தைதான். ஆனாலும் அதிபர் கிராண்ட் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார். “பளார்” என்று அந்தக் குழந்தையை அறைந்தேவிட்டார். அங்கிருந்த அனைவருமே அதிபரின் இந்தக் கோபத்தை கண்டு திகைத்தனர். பிரார்த்தனைக் கூட்டம் தடைப்பட்டது.

**தாய் தந்த விளக்கம்:** இப்போது மீண்டுமாக வலுவாக அறையும் சப்தம் கேட்டது. இம்முறை அறைந்தது அதிபர் கிராண்ட்டின் தாய்! அவர் தன் மகன் கிராண்டை அறைந்து விட்டார். கிராண்ட் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவரால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. “அமெரிக்க அதிபரை அறைந்து விட்டீர்களே!” என்று ஒரு அதிகாரி மெதுவாக அவர் தாயாரிடம் கேட்டார். அந்த வயோதிகத் தாய் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. பிறகு கூறினார், “அவர் (அதிபர்) அவருடைய பிள்ளையைக் கண்டித்தார். நான் என் பிள்ளையைக் கண்டித்தேன்! இது பிரார்த்தனைக் கூடம். இறைவன் சந்நிதியில் கோபத்திற்கு இடமில்லை.” அப்போது அதிபர் கிராண்ட் குழந்தை விஷயத்தில் உணர்ச்சிவசப்பட்டு அடித்ததற்காக மனம் வருந்தியவராக தன் தாயிடம் மன்னிப்புக் கோரினார். அந்தத் தாய் தன் மகனின் தவறை திருத்த வயதோ, அவர் வகித்த பதவியோ, வெள்ளை மாளிகையோ தடையாக இல்லை.

# பயப்படாதே

அபிரா

இளைஞன் ஒருவன் சொந்தமாகத் தொழில் துவங்குவதற்கு தேவையான பணம் கிடைக்காததால் அதைச் சேகரிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தான். தனது தாத்தா பரிசாகக் கொடுத்த புத்தர் சிலை ஞாபகத்திற்கு வந்தது. அதை விற்பதற்காக அதைப் பற்றிய விளம்பரத்தைக் கொடுத்தான். அதைப் பார்த்த உடனே நான்கு நபர்கள் அவனிடம் வந்து மிகக்குறைவான விலைக்கு அதைக் கேட்டனர். அதனால் மனம் உடைந்து போனான். ஒருவேளை தாத்தா பிறரிடம் ஏமாற்றப்பட்டு இருப்பாரோ இவ்வளவு குறைவாக இதன் விலையைக் கேட்கின்றனரே என்று எண்ணினான்.

இறுதியாக வேறோருவர் வந்து அந்தச் சிலையை முன்பு கேட்டிருந்தவர்களைவிட இரு மடங்கு அதிகத் தொகைக்கு கேட்டார். பிறரை விட இவர் அதிகமாக கேட்டதால் அந்தச் சிலையை அவரிடம் விற்றுவிட்டான். ஒருமாதம் கழித்து அவனது தொழிலுக்குத் தேவையானப் பணத்தைச் சேமித்து வைத்து விட்டு தொழில் துவங்கும் நோக்கத்தோடு கடைத்தெரு பக்கம் நடந்து சென்றான். அப்போது தான் விற்ற அந்தச் சிலை ஒரு கடையில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அதைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியம் அவனுக்கு. உடனே அவன் அந்த கடைக்குச் சென்று அதன் விலையைப் பார்த்தான்; அதைப் பார்த்ததும் அவன் வாயடைத்து நின்றான். அந்தச் சிலையில் தான் விற்ற தொகையைவிட பல மடங்கு அதிக விலை ஒட்டப்பட்டிருந்து. அந்தக் கடைக்காரரிடம் அதைப் பற்றி விசாரித்தான். உடனே அவர் அதன் விவரத்தைக் கூறினார். மனம் உடைந்த அவன் கடைக்காரரிடம் கோபபட்டான். “நீ மற்றவரிடம் ஏமாற்றப்பட்டுள்ளாய்” என்று கூறினார் அந்தக் கடைக்காரர். ‘‘உன்னிடம் வந்து விலை கேட்டவர்கள் அனைவரும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிகக்குறைவான விலைக்கு அந்தச் சிலையைக் கேட்டுவிட்டு அதன் மதிப்பைக் குறைத்தனர். உடனே இதன் மதிப்பு இவ்வளவு குறைவுதான் என்று உன் மனதில் பதிந்திருக்கும். அதனால் அவர்கள் கேட்ட விலைக்கு அதனைக் கொடுத்திருப்பாய். ஆனால் அதன் உண்மையான மதிப்பு அதிகம்’’ என்று கூறினார். அவ்விளைஞன் தான் ஏமாற்றப்பட்டதை நினைத்து நொந்துகொண்டான்.

எந்தவொரு மனிதன் தன்னிடம் உள்ள திறமைகளை, இலட்சியத்தை மதிக்கிறானோ, நம்புகிறானோ அவன் தனது வாழ்வில் வெற்றியை அடைகிறான். எவன் ஒருவன் பிறரின் வார்த்தையை கேட்டு தனது திறமை மீதும், இலட்சியத்தின் மீதும் நம்பிக்கையை இழக்கின்றானோ அவன் அனைத்தையும் இழந்தவன் ஆகின்றான். யாரையும் நம்பி வாழாதே! உன் மீது நம்பிக்கை வை. எவருக்கும் பயப்படாதே. உன்னில் உள்ள திறமைகளை, இலட்சியத்தை வெளிக்கொணர ஆயிரம் தடைகள் வந்தாலும் எதிர்த்து நின்று போராடு. உன்னில் உள்ள இலட்சியம் என்ற மனிதனை பிறருக்கு காண்பிப்பதே குறிக்கோளாகக் கொண்டு செயல்படு.

---

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே"

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-02-2021 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு விழுப்புரம், கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

எம் நினைவை விட்டு நீங்காமல் உள்ளத்தின் உணர்வில் உறைபனியாய் உறைந்திருக்கும் உன் நினைவுகளால் வாடும்.

திரு. **S. பிரான்சிஸ்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21-10-1951 | 19-02-12016 |

"உன் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன் ஆண்டவரே வார்த்தையில் தவறாத இறைவா நீர் என்னை மீட்டருள்வீர்" சங்கீதம்.30:5

**மனைவி,**
**மகள், மருமகன்,**
**மகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்: 29-6-1933



மறைவு: 19-2-2020

திரு. **எ.ஜே.இருதயநாதன்**

"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவருமே சாக மாட்டார்கள்" யோ.11:26

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-02-2021 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளோரின் ஆன்மாக்களுக்காக சர்வவியாபி வாசகர்களால் சிறப்பாக செபிக்கப்படுகிறது.**

# விண்ணக வாழ்வின் 11-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" –யோவான். 11:25

**அ**ன்புத் திருவுருவே! அழகோவியமே!
**ஆ**ருயிரே! ஆனந்தமே! அம்மா!
**இ**ணையில்லாப் பேரெழிலே!
**ஈ**கையுடன் மிளிர்ந்தவரே!
**உ**த்தமியாய் உற்ற துணையாய்
**ஊ**க்கச் சாரல் ஆனாய் நீ!
**எ**ளிமையை ஏந்திக் கொண்டு
**ஏ**சுபிரான் வழிநடந்தாய் நீ
**ஐ**யமில்லை! வான்வீடு உனக்கே சொந்தம்
**ஒ**ருபோதும் மறப்பதில்லை உனை எங்கள் நெஞ்சம்
**ஓ**ங்கார நாதமாய்
**ஔ**டத அமுதமாய்
உன் ஆசைகளை அகலாக்கி ஆனந்தத்தை திரியாக்கி எம்மை ஒளிர செய்தாயே அம்மா! இனி அந்த ஒளியை எங்கு காண்போம்!

**உம் பிரிவால் வாடும்**
**அன்பு கணவர்**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**
புதுவை.

## திருமதி.ஒதேத் (எ) ஜாக்குலின் ரத்தினராஜம்

**மண்ணில் மலர்ந்தது : 27.11.1944**
**விண்ணில் மலர்ந்தது : 17.02.2010**

**திருப்பலி: 17–02–2021 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் நினைவுத் திருப்பலி நிறைவேற்றப்படும் அனைவரும் அருள்கூர்ந்து செபிக்க அழைக்கின்றோம்.**

## 30–ஆம் நாள் நினைவு அஞ்ச–



மலர்ந்தது
**04-02-1952**
உதிர்ந்தது
**17-01-2021**

மலர்ந்தது
**10-04-1935**
உதிர்ந்தது
**20-01-2021**

**திருமதி. M. மிசேல் பாத்திமா ரீத்தா   திரு. S. மரி பெர்னார்டு அருள்நாதன்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான் 11:25

**இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் வாழ்வில் ஒளியாய் திகழ்ந்து, எங்களை அன்போடு நேசித்து, இறை விசுவாசத்தில் நடத்திச் சென்று இவ்வுலக வாழ்விலிருந்து உம்மால் அன்போடு தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் அன்பு பெற்றோர் திருமதி. M. மிசேல் பாத்திமா ரீத்தா – திரு. S.மரி பெர்னார்டு அருள்நாதன் அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்தருளும் ஆண்டவரே! ஆமென்.**

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-02-2021 அன்று காலை 6.15 மணிக்கு லாஸ்பேட்டை தாகூர் நகர், தூய ஆவியார் ஆலயத்திலும், மதியம் 12.00 திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
தம்பி: **ரோமன் ஜோசப் அலெக்சாண்டர்**
**மற்றும் மகன், மகள்கள், மருமகன்கள், பேத்தி, குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச-

தோற்றம்:31.01.1955



மறைவு: 16.02.2020

**திரு. பெனடிக்ட் எழில் செல்வின்**

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." யோவான்.11:25*

16-02-2021 காலை 6.00 மணிக்கு, நெல்-த்தோப்பு, தூய விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

செப உதவி கோரும்
**குடும்பத்தினர்.**

சென்ற வாரத் தொடர்ச்சி **21**

# கிறிஸ்தவக் குறியீடுகளும் அடையாளங்களும்

அருள்பணி. **A.ஆரோக்கியராஜ்,** - முதல்வர், விரியூர்.

## தவக்காலம்

**3) பாடுகள் மலர்:**



தென் அமெரிக்க நாட்டின் மழைக்காடுகளில் வளரும் ஒரு மலர்செடியின் பெயர்தான் பாடுகள் மலர். 1610 ஆம் ஆண்டு ஒரு இயேசு சபை குருவானவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பூ, தண்டு, இலைகள் தமத் திருத்துவத்தையும், இதன் இலை அமைப்பு ஈட்டியின் அமைப்பையும், 10 மலரிதழ்கள் பாடுகளின்போது இருந்த 10 அப்போஸ்தலர்களையும் (பேதுரு மறுத-த்தார், யூதாஸ் காட்டிக்கொடுத்தார்), மலரில் உள்ள கதிர்கள் ஒளிவட்டத்தையும், சூலகம் சுத்தியலையும், 3 மகரந்தம் - மூன்று ஆணிகளையும், மகரந்தக் கூடு - இயேசுவின் காயங்களையும் குறிப்பதாக பொருள் கூறினார். இது 5 காய மலர் என்றும், இயேசுவின் முள்முடி என்றும் அழைக்கப்படுகின்றது.

## உயிர்ப்பின் அடையாளங்கள்

**I. பாஸ்கா திரி:**



உயிர்ப்புப் பெருவிழா கொண்டாட்டத்தின் மையம் இந்தப் பாஸ்கா திரி. மெழுகுத்திரியானது தேன்மெழுகால் ஆனது. ஏனெனில் இது குறித்துக்காட்டும் கிறிஸ்து மாட்சிமை மிகுந்தவர். ஏற்றப்படும் ஒளியானது கிறிஸ்துவே உலகின் ஒளி என்பதைக் குறிக்கின்றது. அதில் வரையப்படும் சிலுவையானது கிறிஸ்துவத்தின் அடையாளம். கிறிஸ்துவின் அடையாளம் ஆல்பா மற்றும் ஒமேகா என்ற எழுத்துகள் "கிறிஸ்துவே முதலும் முடிவும்" (திவெ 22:13) என்பதையும், ஆண்டுகளைக் குறிப்பது கிறிஸ்துவே அனைத்திற்கும் அரசர் என்பதை, "காலங்களும் அவருடையன, யுகங்களும் அவருடையன, மாட்சியும் புகழும் என்றென்றும் அவருக்கே உரியது" என்ற செபத்தின் வழியாக தெளிவுபடுத்துகின்றது.

**2. பாஸ்கா தண்ணீர்:**



இது திருமுழுக்குத் தண்ணீர். பாஸ்கா திருவிழிப்பின் போது புதியதாக திருமுழுக்குப் பெறுகின்றவர்களுக்காக புனிதப்படுத்தப்படும் நீர். அன்றைய தினத்தில் இத்தண்ணீர் சிறப்பு ஆசீரால் புனிதப்படுத்தப்படுகின்றது. பாஸ்கா திரி இத்தண்ணீரினுள் மூன்றுமுறை இறக்கி எடுக்கப்படுகின்றது. உலகப்படைப்பின் போது தண்ணீரின்மீது அசைவாடிய; நோவாவின் காலத்தில் தண்ணீர் வற்றக் காரணமான; இயேசு திருமுழுக்குப் பெறுகையில் வானினின்று இறங்கி வந்த ஆவியை அழைத்துச் செபித்து இத்தண்ணீர் அர்ச்சிக்கப்படுகின்றது. அவசரத் தேவையில் எந்த தூய்மையான நீரையும் பயன்படுத்தலாமெனினும் மந்திரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துவதே முறையாகும். இத்தண்ணீரை மக்கள் தங்கள் இல்லங்களையும் வயல்வெளிகளையும் மந்திரிக்கப் பயன்படுத்துவர்.

**3. நெருப்பு:**



பாஸ்கா விழாவின் மிக முக்கியமான மற்றுமொரு அடையாளம் நெருப்பு. பாஸ்கா பெருவிழா இந்நெருப்பை புனிதப்படுத்தும் சடங்கி-ருந்துதான் ஆரம்பமாகின்றது. மரக்கட்டைகளைக்கொண்டு தீ மூட்டப்பட்டு நெருப்பு உண்டாக்கி அதனைக் குருவானவர் மந்திரிக்க இவ்வாறு புனிதப்படுத்தப்பட்ட தீயி-ருந்துதான் கிறிஸ்துவைக் குறிக்கும் பாஸ்கா திரி ஏற்றப்படுகின்றது. குரு பாஸ்கா திரி பவனியில் மூன்று இல்லங்களில் நின்று 'கிறிஸ்துவின் ஒளி இதோ' எனப்பாட 'இறைவனுக்கு நன்றி' என மக்கள் பதிலுரைப்பர். மக்கள் இந்த புனிதப்படுத்தப்பட்ட நெருப்பை இல்லங்களுக்கு மெழுகுத்திரிகளில் எடுத்துச்சென்று வீட்டில் ஒளியேற்றுவர். இதனால் தீமை ஒழிந்து இல்லங்களில் இறையருள் பெருகும் என்று மக்கள் நம்புகின்றனர்.

**4. வண்ணத்துப்பூச்சி:**



இது உயிர்த்தெழுத-ன் அடையாளம். கம்பளிப்பூச்சியானது தரையில் ஊர்ந்து செல்கின்றது. பிறகு அது ஒரு கூடு செய்து அதனுள் சென்று மூடிக்கொள்கிறது. அந்தக் கூடு அந்தப் புழுவுக்கு ஒரு கல்லறை போன்று இருக்கின்றது. ஆனால் அந்தக் கூட்டிற்குள் இருந்து அழகிய வண்ணத்துப்பூச்சி வெளிவருகிறது. மனிதன் கம்பளிப்பூச்சியின் முடிவு என்று சொன்னதை கடவுள் வண்ணத்துப்பூச்சி என்றார். இவ்வாறு அழிவுக்குரிய மனித உடலானது உயிர்ப்பின் வழியாக மகிமையடைந்த நிலையைப் பெறுகின்றது.

**5. ஈஸ்டர் முட்டை:**



முட்டை என்பது பாரம்பரியமாக கருவுருதல், மறுபிறப்பின் அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவ சமயத்தில் முட்டையானது இயேசுவின் உயிர்ப்பின் அடையாளமாக உள்ளது. முட்டை ஓடுகள் வெற்றுக் கல்லறையையும், உயிரற்றதாகத் தோன்றும் முட்டையினின்று வெளிவரும் உயிரானது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாக விளங்குகின்றது.

அறிவோம் தொடர்ந்து

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.**
Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**